1982 எப்ரல் 5]

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, பீடித் தொழிலாளார்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த வீடு கட்டும் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த இடத்தில் எத்தனை வீடுகள் வீதம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது? இதுவரை எவ்வளவு வீடுகள் ஒதுக்கப் பட்டுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் வேலூர் வரையில்தான் இது என்று கருதுகிறேன். இந்த செஸ் பண்டு திட்டம் 16-2-1977 முதல் 1-4-1979 வரையில் இருந்தது. அதற்குப் பின்னால்தான் ஜனதா ஆட்சியில் அது நிறுத்தப் பட்டது. பின்னால் நம்முடைய அரசு ஒரு தீர்மானம் நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது. அதனால்தான் இந்தத் திட்டம் மீண்டும் வந்தது என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசு மீண்டும் கொண்டுவந்திருக்கிறது. 1-1-1982 முதல் மீண்டும் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. பணம் இனிமேல்தான் வரவேண்டும். பணம் குவிந்த பிறகு (அக்குமுலேட் ஆன பிறகு) இதுபற்றி மாநில அளவில் உள்ள குழு ஆலோசனை செய்யும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களின் அவல நிலையை உத்தேசித்து, அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களை உத்தேசித்து, ஒவ்வொரு நகரத்திலும் இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இதிலே தொழிலாளர்கள் கொடுக்க வேண்டிய பங்குத்தொகை. அதாவது அட்வான்சாக கொடுக்கவேண்டியது 500 ரூபாய். 228 இன்ஸ்டால்மென்டில் 19 வருஷங்களில் மீதி தொகையைச் செலுத்தலாம். ஒவ்வொருவருக்கும் 1,500 ரூபாய் மானியம் என்ற வகையில் செஸ் பண்டிலிருந்து தரப்படுகிறது. செஸ் பண்டு எவ்வளவு அதிகமாக ஆகிறதோ அதைப்பொறுத்துதான் விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. அந்தத் தொகை அதிகம் ஆகவேண்டும். அதன் பின்னால் நாம் சண்டைபோட்டு, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு கேட்க வேண்டுமோ அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை

*வினா எண் 764—திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு சட்ட ரீதியாக சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாட்டில் உப்பளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,860.

(ஆ) இது சம்பந்தமாக அரசுக்கு எவ்வித புகார்களும் இதுவரை வரவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, உப்பளத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக தூத்துக்குடி பகுதியில் மட்டுமே 10,000க்கும் மேற்பட்டவர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச சம்பளத்தை விட, அவர்கள் அதிகமாகச் சம்பளம் தற்போது வாங்கிக் கொண்டு இருப்பதால், அந்த குறைந்த பட்ச அளவை 'ரிவைஸ்' செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கூடுமான வரையில் இந்த அரசு செய்யக்கருதி இருப்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்கவேண்டிய நிலை தற்போது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது புதிதாகக் குறைந்த பட்ச ஊதியக் குழு அமைப்பதற்கு கமிஷனரிடத்தில் தகவல் கேட்கப்பட்டு இருக்கிறது. அவரிடமிருந்து செயற்குறிப்பு வந்தவுடன் மறுபடியும் அந்த குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க குழு அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த உப்பளத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படாமலேயே நீண்ட காலமாக இருக்கிறார்கள். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு ஒரு உப்பளத்திலும், மற்றொரு நாள் வேறொரு உப்பளத்திலும் என்ற முறையில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதன் காரணமாகத்தான் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நல்ல தொழிற்சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்று அரசு சொல்கிறது. All workers should be organised என்று

1982 ஏப்ரல் 5]

கருதுகிறது. எனவே, அத்தகைய நல்ல அமைப்புகளை உருவாக்கி அந்த அமைப்புகளின் மூலமாக தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை சொல்லி, முதலாளிகள் மட்டத்தில் அதைச் செய்து தரவில்லையென்று சொன்னால், அரசு அதில் ஆவன செய்ய முயற்சிக்கும்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பளங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பற்றி ஒரு குழு பரிசீலித்து அறிக்கை அளித்து இருப்பதாக அறிகிறேன். அந்த உப்பளங்களில் பணியாற்றும் ஊழியர்கள் இளம் வயதிலேயே கண் இழந்து விடுவதாகவும், அவர்களுடைய தோற்றம் விகாரமாக ஆகிவிடுகிறது என்றும் சொல்லப் படுவதை அரசு அறியுமா? ஆகவே, இத்தகைய முறையில் பணியாற்றும் அவர்களுக்கு 6 நாள் பணியாற்றியபின், 7-வது நாள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் விளக்கமாகத் தரப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: தலைவர் அவர்களே, உப்பளங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் கடற்கரையில் அதிகமாக இருப்பதால், அவர்களுக்குக் கண் போய்விடுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் ஏற்கனவே சொன்னது முழுக்க முழுக்க உண்மை. அவர்களுக்குக் கண் பார்வை போய்விடுவ தோடு மட்டுமல்லாமல், தோல் வியாதியும் அவர்களுக்கு வந்து அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த உப்பள முதலாளிகளிடத் தில் அரசாங்கம் சொல்லி, அத்தகைய தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, உப்பளங்களில் வேலை செய்பவர்களுக்கு கண் பார்வை போய் விடுவது உண்மையா? தோல் வியாதியால் பாதிக்கப்படுவது உண்மையா? அப்படியானால் என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது, என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்கள் தனியாகக் கேட்டால், அதற்குப் பின்னால் தகவல் சேகரித்து நான் பதில் தருகிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தாமரைக்குளம் என்ற பகுதியில் சுமார் 200—க்கும் அதிகமான தொழிலாளர்கள் உப்பளங்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் குறைந்தபட்ச கூலி கொடுக்கப்படவேண்டும் என்று நிலைமைகள் இருந்தும், அது கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்தக் கூலியைக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலியை கொடுக்கவேண்டும் என்பது கட்டாயம். எனவே குறைந்தபட்சக் கூலி எங்காவது கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்தால், உடனடியாக அதைப் பற்றி பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற வகையில் அதற்காக ஒரு டி, சி. எல். (மினிமம் வேஜெஸ்) நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர் மூலமாக இந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறைந்தபட்சக் கூலி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பதற்கு இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று-நோட்டிபிகேஷன். அதாவது—ஒரு முடிவை எடுத்து, அதை நோட்டிபை செய்து, அதற்கு யாரிடமிருந்தாவது அப்ஜெக்ஷன் வருகிறதா என்று பார்த்து, அதற்குப் பின்னாலே அந்த முடிவை கன்பர்ம் செய்வது. இன்னொன்று, குழு அமைப்பது. அந்தக் குழு செய்கிற பரிந்துரையின் அடிப்படையில் அதை அமல் படுத்துவது என்பதாகும். ஏற்கனவே, உப்பளத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது நிர்ணயித்து நான்கு ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால்,

1982 ஏப்ரல் 5]

மீண்டும் ஒரு குழு அமைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கமிஷ்னரிடத்திலிருந்து தகவல் கிடைக்கப் பெற்றவுடன், புதியதாகக் குழு அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரை வந்த பிறகு அது கட்டாயம் செயல்படுத்தப்படும்.

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் வரைவுச் சட்டம்

*வினா எண் 765—திரு என். எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் மத்திய வரைவுச் சட்டம் 1980-ன் பேரில் மாநில அரசு தெரிவித்துள்ள கருத்துக்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15, 16 தேதிகளில் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டத்திலே இந்தச் சட்டத்தைப் பெரிதும் வரவேற்று தமிழக அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்களிலே ஏறத்தாழ 5 கருத்துக்களைப் பற்றி இங்கே விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த 5 கருத்துக்களின் மீது மத்திய அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் எவை? இவற்றை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதா? அதற்குப் பின்னர் அவர்கள் அளித்த பதில் பற்றிய விவரம் என்ன?

மாண்புகுமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கின்ற சட்டத்தில் நல்ல சிறப்பான அம்சங்கள் இருக்கின்றன. எனவே மத்திய அரசு தன்னுடைய சட்டத்தைக் கொண்டு வந்து அமல் படுத்தினால் அது எப்படி அமல்படுத்தப்படுகின்றது, எப்படி தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கின்றது என்று பார்த்து அதிலே குறை இருந்தால் மாநில அரசு என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதை மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

345-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.